## திராவிடத்தால் வாழ்கிறோம்

1281

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

75

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

# எந்த நெருக்கடியிலும் கழகத்தைக் கைவிடேல்!

1975-ஆம் ஆண்டு, ஜூன் 25 முதல் 1977-ஆம் ஆண்டு மார்ச் 21, வரை பிரதமர் இந்திரா காந்தி அரசால், இந்தியாவில் ‘எமர்ஜென்சி’ அமல்படுத்தப்பட்டது. இந்த 21 மாதங்கள் என்பது, திராவிட முன்னேற்றக் கழகம் நெருப்பாற்றில் நீச்சல் போட்ட காலம். நாடு முழுக்க, எதிர்க்கட்சித் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர்.

மற்றவர்களுக்கெல்லாம் கைது, கருத்துரிமை மறுப்பு, சிறைக்கொடுமை மட்டும்தான் என்றால், தி.மு.கழகத்திற்கு ஆட்சியும் பறிபோனது. ஆட்சி அதிகாரத்தைவிட, ஜனநாயகம் தான் முக்கியம் என, மாநில உரிமைகளைக் காக்க முன்னின்று தி.மு.கழகம் எமர்ஜென்சியை எதிர்த்துப் போராடியதால், ஆட்சியை இழந்தது.

வரலாற்றின் அந்தக் கொடும் பக்கங்களில் தி.மு.கழக உடன்பிறப்புகளாக நின்று போராடிய சிறுபான்மையினரைக் காலம் பேசத் தவறிவிட்டது. அதைப் பதிவுசெய்யும் வாய்ப்பு, இத்தொடர்முலம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்றே கருதுகிறேன்.

இந்த வரலாற்றில், 2 இஸ்லாமியர்களுக்கு மிக முக்கியப் பங்கு இருக்கிறது. ஒன்று, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட காலத்தில், இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்தவர், பக்ருதீன் அலி அகமது. முத்தமிழறிஞர் எண்ணத்தில் உருவான வள்ளுவர் கோட்டத்தைத் திறந்துவைத்தவரும் அவர்தான். மற்றொருவர், நீதிபதி இஸ்மாயில். நெருக்கடி நிலை காலத்தில் சென்னை மத்திய சிறையில் ‘மிசா’ கைதிகள் சித்ரவதை செய்யப்பட்டது குறித்து விசாரிக்க, 1977-இல் அமைக்கப்பட்ட ஆணையத்தின் தலைவராகச் செயல்பட்டவர், நீதிபதி இஸ்மாயில்.

முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய ‘நெருக்கடி நெருப்பாறு’ நூலை வாசிக்கும்போது, எமர்ஜென்சி காலகட்ட அரசியல் நிகழ்வுகள், ஜனநாயகப் போராட்டங்கள் மற்றும் சிறைவாசங்களில் இஸ்லாமியத் தலைவர்கள் மற்றும் கழகத் தொண்டர்களாக இருந்த இஸ்லாமியர்களின் ஈடுபாட்டினை விரிவாக அறிய முடிகிறது. எமர்ஜென்சியில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டபோது, இஸ்லாமியர்களுக்கும் தனிப்பட்ட முறையில் அது மிகப்பெரிய அரசியல் பிரதிநிதித்துவ இழப்பாகத்தான் இருந்தது. ஏனெனில், அப்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக, 6 உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இருந்தனர்.

ஆட்சி கலைக்கப்பட்ட பின்பு, மிசாவில் கைதானோர் பட்டியலைப் பார்க்கும்போது, சென்னையில் ஆயிரம்விளக்கு உசேன், செங்கல்பட்டில் அன்வர், வகாப், திருச்சியில் செட்டிக்குளம் அல்லா பிச்சை, ராமநாதபுரத்தில் அகமது, சாகுல் அமீது, நெல்லையில் புகாரி, மஸ்தான், தஞ்சையில் அப்துல் சமது, புதுக்கோட்டையில் அப்துல் மஜீத் மற்றும் தமிழ்நாடெங்கும் ஜின்னா, காதர் பாட்சா எனப் பரவலாகப் பல்வேறு மாவட்டங்களில் இஸ்லாமியர்கள் கைதுசெய்யப்பட்டனர். ரத்தம் சொட்டச்சொட்ட சிறையில் அடிபட்டது, உணவில் மண்ணையும் சிறுநீரையும் கலந்து கொடுத்தது, சுகாதாரமற்ற முறையில் சிறைக்கொடுமைகளை அனுபவிக்கச் செய்தது என, கழகத்தினர் அனுபவித்த அத்தனை சிறைக்கொடுமைகளையும் இவர்களும் அனுபவித்துள்ளனர்.

‘மிசா’ காலகட்டத்தில் கலைஞரைத் தனிமைப்படுத்த வேண்டுமென்பதற்காக, ஆளுநர் ஆட்சியில் பல்வேறு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கலைஞரோடு காரில் பேச்சுத் துணைக்காக யாராவது சென்றால் கூட, கைதுசெய்யப்பட்டனர். அதனால், ஒருவர் கைது செய்யப்பட்டுவிட்டால், அடுத்து ஒருவர் என ஆட்கள் மாறிக்கொண்டே இருந்தனர். அப்படி கலைஞருடன் காரில் சில நாட்கள் சென்றவர், ஆயிரம்விளக்கு உசேன். அதனாலேயே அவரும் ‘மிசா’வில் கைதானார் என்பது வரலாறு.

### ஆற்றுப்படுத்திய சாதிக்பாட்சா

அந்தக் காலகட்டத்தில், ஏதேதோ காரணங்களைச் சொல்லிவிட்டு, கழகத்தினர் கலைஞரைக் காண கோபாலபுரம் வருவார்கள். திருப்பதிக்குப் போகிறோம், திருத்தணிக்குப் போகிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு, வந்து பார்ப்பார்கள். தலைவரைச் சந்தித்த பின்னர் அன்பகம் வருபவர்களை ஆற்றுப் படுத்தி அனுப்பியவர், ‘கழகமே கடமை’ என வாழ்ந்த சாதிக் பாட்சா.

அதைப்பற்றி கலைஞர் குறிப்பிடுகையில், “அமைச்சராக இருந்தோமே என்கிற நினைவையே விட்டுவிட்டு, சாதிக் பாட்சா அவர்கள், அன்பகத்தில் எல்லாக் கடமைகளையும் ஆற்றுவார்” என்கிறார்.

நெருக்கடி நிலை அமலில் இருந்த வேளையில்தான், 1975-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25, 26, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில், கோவையில் தி.மு.கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐந்தாவது மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் மிக முக்கியத் தீர்மானமாக, இரண்டாவது தீர்மானம் அமைந்தது. ‘பொதுத் தேர்தல், முறைப்படி குறித்த காலத்தில் நடைபெற வேண்டும். அரசியல் கட்சிகளின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மக்கள் மதிப்பீடு செய்து தீர்ப்பளிக்கும் வாய்ப்பைப் பெறுவதுதான் உண்மையான ஜனநாயக நெறியாகும். ஜனநாயகரீதியாகப் பொதுத் தேர்தலை உரிய காலத்தில் நேர்மையான முறையில் நடத்த, அதற்கேற்ற சுதந்திரமான சூழ்நிலைகளை மத்திய அரசு உருவாக்கித் தர வேண்டும். மக்களுக்குப் போதிய முன்னறிவிப்பு தந்து, வரும் மார்ச் மாதத்தில் நாடாளுமன்ற மற்றும் மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களை ஒருங்கிணைத்து ஒன்றாக நடத்த வேண்டும்’ என்று அந்தத் தீர்மான நிறைவேற்றம் வலியுறுத்தியது. அத்தீர்மானத்தை முன்மொழிந்தவர், சாதிக் பாட்சா.

படம் AI சித்தரிப்பு



அதுமட்டுமல்ல, திருமண மண்டபங்களில் பேசுவதற்குக் கூட, அந்தக் காலகட்டத்தில் தடை இருந்தது. ஆனால், ‘எந்தத் தடைக்கும் அஞ்ச மாட்டேன்’ என அப்போது நிரூபித்தவர், சாதிக் பாட்சா. 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3-ஆம் தேதி, சென்னை யோக லட்சுமி திருமண மண்டபத்தில் என்.வி.என். அவர்களின் படத்திறப்பு விழா நடைபெற்றது. மண்டபம் நிரம்பி மக்கள் வெள்ளம்போல கூடியிருந்த அந்தக் கூட்டத்தில், கலந்து கொண்டு சிறப்புரையாற்றியவர்களில் சாதிக் பாட்சாவும் ஒருவர்.

எனவே, நெருக்கடிநிலை காலத்தின் இருண்ட பக்கங்களில், இஸ்லாமியச் சமுதாயத்தைச் சேர்ந்த அரசியல் செயல்பாட்டாளர்கள், கழக உடன்பிறப்புகளின் இந்தத் தியாகத்தையும் பங்களிப்பையும் மறக்க முடியாது. அவர்கள் இஸ்லாமியர்களாக இதில் பங்களிக்கவில்லை. தி.மு.கழகத்தின் உடன்பிறப்புகளாகத்தான் அவர்களின் பங்களிப்புகள் அமைந்திருந்தன.

இன்னும் ஆழமாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ்நாட்டில் இஸ்லாமிய சமூகத்தின் முழுமுதல் அரசியல் முகமான காயிதே மில்லத் அவர்களைப் பற்றிய கலைஞர் மதிப்பீடு ஒன்றே, தி.மு.கழகத்தோடு இஸ்லாமியர்கள் ஏன் பின்னிப் பிணைந்து இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானது.

1975-ஆம் ஆண்டு ஜூலை 6-ஆம் தேதி, சென்னை கடற்கரை, சீரணி அரங்கில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் திரண்டிருந்த அந்தப் பிரம்மாண்ட கூட்டத்தில் கலைஞர் பேசும்போது, “இராஜாஜி இருந்தால், ‘ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்’ என்று பிரார்த்தனை செய்துகொள்ளச் சொல்லுவார். பெரியார் இருந்தால், ‘இதை வைத்துப் புரட்சி நடத்துங்கள்’ என்று சொல்லுவார். கண்ணியமிகு காயிதே மில்லத் இருந்தால், ‘நெருக்கடிநிலை தேவையில்லை’ எனச் சொல்லியிருப்பார்” என காயிதே மில்லத்தை அங்கு குறிப்பிட்டார்.

“அண்ணா இருந்தால், என்ன சொல்லுவாரோ- அதைச் சொல்லுகிறேன்- இப்போது எழுந்து நில்லுங்கள்!” என்று முழங்கி, “எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும், இந்தியாவின் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல் பாதுகாப்பதற்குத் தயங்க மாட்டோம்” என்று வங்கப் பெருங்கடல் குலுங்கிட, உறுதிமொழி ஏற்றார். எந்த நொடியிலும் இஸ்லாமியர்களைத் தன் இதயத்தில் வைத்திருந்த கலைஞரின் இந்தக் கழகத்தை, எந்த நெருக்கடி வந்தாலும் கைவிடாது, இஸ்லாமியச் சமூகம்.

...நீளும்

> “எந்த நொடியிலும் இஸ்லாமியர்களைத் தன் இதயத்தில் வைத்திருந்த கலைஞரின் இந்தக் கழகத்தை, எந்த நெருக்கடி வந்தாலும் கைவிடாது இஸ்லாமியச் சமூகம்.”

## அவதூறு வழக்கில் வாதாடத் தொடங்கினால்...

தஞ்சையில், காவிரி நீர் உரிமையை மீட்காத, கையாலாகாத அரசினைக் கண்டித்து, கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்குப் பயந்து, எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மீது அவதூறு வழக்கு புனைந்து, நீதிமன்றத்தால் குட்டு வாங்கியது, த.வெ.க. அரசு. இதனைச் சமூக ஜனநாயக சக்திகள் கண்டித்து எழுதிவரும் நிலையில், மூத்த பத்திரிகையாளர் லோக நாதன் தங்கசாமி, வழக்கில் தி.மு.க. வாதாடத் தொடங்கினால், ‘அரசுக்குத்தான் அசிங்கம் ஏற்படும்’ எனக் கூறியுள்ளார். அவரது பதிவில்...

“தமிழக வெற்றிக் கழகக் கூட்டணி அரசு எடுக்கும் கைது நடவடிக்கைகள் அத்தனையும் தோல்வியில்தான் முடிந்து கொண்டிருக்கின்றன. பல தோல்விகள் கிடைத்தாலும், சளைக்காமல் முருங்கை மரம் ஏறும் வேதாளம் போல் ஒவ்வொருவராகக் கைது செய்ய முனைகிறது, காவல் துறை. அவர்கள் வழக்குப்பதிவு செய்யும் விதமும் அவர்கள் சேர்க்கும் பிரிவுகளும் சாமானியன் பார்த்த உடனேயே, ‘இது வேலைக்கு ஆகாது’ என்று தெரியும் நிலையில் உள்ளது. நீதிமன்றங்களுக்குச் சென்றவுடன் அது தள்ளுபடியும் ஆகிறது. இனியும் கைது நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாமல், மக்கள் நலத்திட்டங்களை எப்படிச் செயல்படுத்துவது என்பதில், முதலமைச்சர் ஜோசப் விஜய் கவனம் செலுத்த வேண்டும்.

‘மாற்றம்’ என்ற பெயரில், ஆட்சிக்கு வந்துள்ளீர்கள். இந்தக் கைது நடவடிக்கைகளையெல்லாம் விட்டுவிட்டு, மக்களுக்கு நல்ல திட்டங்களைச் செயல்படுத்தினால்தான் மக்களின் மனதில் இடம்பிடிக்க முடியும். எதிர்க்கட்சியினரைக் கைதுசெய்வதனால் எதுவும் நடக்கப்போவதில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த வழக்கு, விசாரணைக்கு வராமலேயே தடைபடுமானால், ஆளுங்கட்சிக்கும் முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கும், எந்தப் பெண்மணிக்காகப் போராட்டம் நடத்தினார்களோ, அந்தப் பெண்மணிக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

நீதிமன்றத்தில் விசாரணை என்று வரும்போது, உதயநிதி ஸ்டாலின் தரப்பில் உறுதியாக நின்று வாதிடத் தொடங்கினால், அந்தப் பெண்மணி யார்? அவரைப் பற்றி கூட்டத்தினர் குறிப்பிட்டாலே, ஏன் அரசும் காவல் துறையும் கொதிக்கவேண்டியது உள்ளது? என்பது போன்ற கேள்விகள் எல்லாம் எழும். அது, தன் பல்லைக் குத்தி, நாற்றம் பார்ப்பது போல் அது அமைந்துவிடும். இந்த வழக்கை அப்படியே கைவிட்டு விட்டு, வேறு உருப்படியான வேலையைப் பார்ப்பதுதான் ஜோசப் விஜய் தலைமையிலான அரசுக்கு நன்மை பயக்கக்கூடிய செயலாக அமையும்” என்று குறிப்பிடுகிறார்.

## ஃப்ளாஷ்பேக்


கோ.குபேந்திரன்



### தலைவரிடம் பிறந்தநாள் வாழ்த்து!

2012-ஆம் ஆண்டு மே மாதம் 10-ஆம் தேதி, எனது பிறந்தநாளின்போது, தமிழ்நாட்டின் ஈடு இணையில்லா அன்புத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தேன். தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து, மரியாதை செய்தபோது எடுத்த படம். தலைவரின் வாழ்த்து, ஆண்டாண்டு காலத்துக்கும் வழிநடத்தும்.

**- கோ.குபேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், சிந்தல்பாடி, பாப்பிரெட்டிப்பட்டி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர், தருமபுரி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### இடைவிடாத மாநாடு, விவாதங்கள்!

1961-ஆம் ஆண்டு டிசம்பர் 16, 17-ஆம் தேதி, கோவையில் தேர்தல் சிறப்பு மாநாட்டின் முதல் நாள். நிகழ்ச்சிகள் இரவு 10 மணிக்கு முடிவடைந்த நிலையில், நள்ளிரவு 12 மணிக்கு, கோவை ரங்கையா வீதியிலுள்ள திருமண மண்டபத்தில், பொதுக்குழுக் கூட்டம் நாவலர் தலைமையில் கூடியது. செயற்குழுக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட தேர்தல் அறிக்கையை ஒப்புதலுக்கு வைத்தார், பேரறிஞர் அண்ணா. அதன் பின், மற்ற கட்சிகளுடன் பேச்சுவார்த்தை குறித்த விவாதம் நடைபெற்றது. அடுத்த நாள் மாநாடு, காலை 10 மணிக்கு தொடங்கியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900